ORIGINAL ARTICLE

வ.ஊ.சிதம்பரம் பிள்ளை ஒரு பன்முகப் பார்வையாளர் [VA.Ū.CITAMPARAM PIḶḶAI ORU PAṈMUKAP PĀRVAIYĀḶAR]

C.V.CHIDAMBARAM PILLAI IS A MULTI-FACETED SPECTATOR

இளங்குமரன் சிவநாதன் / Ilangkumaran Sivanadhan *[1]
கிங்ஸ்டன் பால் தம்புராஜ் / Kingston Pal Thamburaj [2]
மு.சற்குணவதி / M.Sargunavathy [3]

[1] Faculty of Languages and communication, Sultan Idris Educational University, Malaysia.
Email: ilangkumaran@fbk.upsi.edu.my
[2] Faculty of Languages and communication, Sultan Idris Educational University, Malaysia.
Email: fkingston@fbk.upsi.edu.my
[3] Department of Tamil, Institute of Distance Education, Univeversity of Madras, India.
Email: gunavathym@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/203

Abstract

This article shed light on V.C. Chidambaram Pillai's passion towards language and elaborates his multifaceted vision as a literary scholar, researcher, literary volunteer, teacher, literary revolutionist, and a great orator. The purpose of this article is to illustrate his diversity. The article corroborates, Chidambaram Pillai’s contribution to the development of Tamil language and Tamil people. The study has adopted the textual approach. This article also explains that no matter what circumstances prevail, V.C.Chidambaram Pillai has never failed to make his contribution to the Tamil language and Tamil community. The conclusion of this article is that wisdom helps to overcome any kind of situations.

Keywords: Chidambaram Pillai, literary volunteer, teacher, literary revolutionist, orator

ஆய்வுச் சாரம்

வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் மொழிப்பற்றும் பன்முகப்பார்வையும் என்ற தலைப்பில் அமைந்த இக்கட்டுரை இலக்கியப்பணி, ஆய்வாளர், இலக்கியத் தொண்டர், நல்லாசிரியர், இலக்கியப் புரட்சியாளர், சிறந்த பேச்சாளர் என்று பல்வகை கோணத்தில் ஆராய்ந்துள்ளது. அவரின் பன்முகத்தன்மையை விளக்க முறையில் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

இக்கட்டுரையின் வாயிலாக வ.உ.சிதம்பரம்பிள்ளை அவர்களின் சிறப்பை அறிய முடிகிறது. மேலும், தமிழ்மொழி வளர்ச்சிக்கும், தமிழ் இன மக்களின் வளர்ச்சிக்கும் சிதம்பரம் பிள்ளை அவர்கள் ஆற்றிய பங்கு புலப்படுகிறது. இக்கட்டுரை நூலாய்வு அணுகுமுறையைப் பின்பற்றியுள்ளது. எத்தகைய சூழல்கள் நிலவினாலும் தன் அறிவின் நிலையில் திரியாது தமிழருக்கும் தமிழ் மொழிக்கும் தன் பங்களிப்பை செய்யத் தவறியதில்லை என்பதையும் இக்கட்டுரை விளக்கி நிற்கிறது. நல்லறிவு எத்தகையச் சூழல்களையும் எதிர்கொள்ளும் என்பதே இக்கட்டுரையின் முடிபாகும்.

கருச்சொற்கள்: வ.உ.சி, ஆய்வாளர், இலக்கியத் தொண்டர், நல்லாசிரியர், இலக்கியப் புரட்சியாளர்,சிறந்த பேச்சாளர்.

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 17th March 2022, revised 2nd April 2022, accepted 1th May 2022

முன்னுரை

வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் தாய்மொழிப் பற்றாளர். அவர்கள் குடும்பமே தமிழ்மொழிமீது, ஈடு இணையில்லாத பற்றுக் கொண்ட குடும்பம். அவருடைய முன்னோர்கள் தமிழ்ப்புலவர்களாக விளங்கினர். அதனால் ஒட்டப்பிடாரத்தில் வ.உ.சி.யின் இல்லத்தைக் 'கவிராயர் வீடு" என்றே அழைப்பர். இளமையில் வ.உ.சி.க்குக் கற்பித்த ஆசிரியர்கள் தமிழ் இலக்கண இலக்கியங்களில் தேர்ச்சிபெற்றவர்கள். ஆதலால் இயல்பாகவே இலக்கிய நூல்களைப் பயிலும் வாய்ப்பினை அவர் பெற்றார். ஆத்திசூடி, உலகநீதி முதலிய ஒழுக்க நூல்களைப் பலமுறை கேட்டுப் பயின்றார். கொன்றை வேந்தன், வெற்றி வேற்கை, நளவெண்பா, மூதுரை ஆகிய நூல்களைப் பொருளுணர்ந்து கற்றார். வ.உ.சி சிதம்பரம் பிள்ளையை அவருடைய பாட்டனார் (வள்ளிநாயகம் பிள்ளை) அன்றாடம் பாரத வாசகம் படிக்கப்பட்ட இடத்திற்கு அழைத்துச் செல்வாராம். அத்துடன் தம்முடைய பாட்டனார் கூறிய இராகவன் கதையினைத் தம் உள்ளத்தில் இருத்திக் கொண்டதாகவும் வ.உ.சி. ஒப்புக் கொள்கிறார். இவருடைய பாட்டி கூறிய திருவிளையாடல் புராணக்கதைகள் மற்றும் நீதிக்கதைகளையும் இவர் விரும்பிக் கேட்பாராம். இவ்வாறு இளமையிலேயே அவர் பெற்ற இலக்கிய அறிவு பிற்காலத்தில் அவரைச் சிறந்த இலக்கிய வித்தகராக மாற்றியிருக்கலாம் (Manian & Ilasai, 2012)[1].

இலக்கியப்பணி

இலக்கிய நூலான சிவஞான போதத்தை எளிய உரைநடையில் நேரிய உரையினை அவர் எழுதியுள்ளமை அவருடைய சமுதாயச் சிந்தனைக்கும் நாட்டுப் பற்றுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும். நாட்டில் மக்களிடையே மதச் சண்டைகள் வந்து விடக் கூடாது என்பதில் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் கவனமாக இருந்திருக்கிறார்கள் என்பதையே இது தெளிவுபடுத்துகிறது (Arockiaraj, 2011)[2]. சிதம்பரனார் சில ஆங்கில நூல்களைத் தமிழில் மொழி பெயர்த்தார். அறநூல்களும் எழுதப்பட்டன. 1) அகமே புறம், 2) வலிமைக்கு மார்க்கம், 3) மனம் போல வாழ்வு, 4) மெய்யறிவு, 5) மெய்யறம். சுயசரிதை தவிர தனிப்பாடல் திரட்டு என்ற கவிதைத் தொகுப்பும் அவரால் எழுதப்பட்டது. 1915ஆம் ஆண்டு தனிப்பாடல் திரட்டு

வெளியிடப்பட்டது. இதில் 380 பாடல்கள் உள்ளன. இவற்றுள் 100 பாடல்கள் கடவுளைப் பற்றியன. 100 பாடல்கள் ஒழுக்கம் பற்றி உரைப்பன. எஞ்சிய 180 பாடல்கள் சுற்றத்தார்க்கும் நண்பர்களுக்கும் உறவுமுறைத் தொடர்பில் அமைந்தார்க்கும் எழுதப் பட்டவை. இவையனைத்தும் சிறைக்குச் செல்வதற்கு முன்பும், சிறையில் இருந்த காலத்தும் பாடப்பட்டவை. இப்பாடல் தொகுப்பில் 350 வெண்பாக்கள், 1 தாலாட்டுப்பாடல், 3 விருத்தப் பாடல்கள், 15 கட்டளைக் கலித்துறைப் பாடல்கள், 17 நிலைமண்டில ஆசிரியப்பாக்கள் ஆகியன அடங்கும். திருக்குறள் முழுமைக்கும் அவர் எழுதிய உரையை அவர் உயிரோடு இருந்தபோது அச்சிட்டு வெளியிட முடியவில்லை. ஆனால் அவர் காலமான பின்பு திருக்குறள் முழுமைக்கும் அவர் எழுதிய உரை அச்சு வடிவம் பெற்றது. திருக்குறளின் 'அறத்துப்பாலை' ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அவ்வாறு மொழிபெயர்ப்பில் ஈடுபடும்போது தமக்கு ஏற்பட்ட ஐயப்பாடுகளை உ.வே. சாமிநாத அய்யர் அவர்களுக்குக் கடிதம் வாயிலாக எழுதித் தெளிவுபடுத்திக் கொண்டார். ஆங்கிலமொழியில் இருந்த தத்துவ நூல்களைத் தழுவி (ஜேம்ஸ் ஆலன் எழுதியவை) மனம் போல வாழ்வு, அகமே புறம், வலிமைக்கு மார்க்கம் என்ற நூல்களை எழுதினார். அத்துடன் மெய்யறிவு, மெய்யறம் என்ற அறநூல்களைக் குறட்பாக்களை அடித்தளமாகக் கொண்டு எழுதினார்.

இலக்கியவாதி

சிறையில் இருக்கும் போது அவருடைய சுயசரிதையைக் கவிதை வடிவில் எழுதினார். தமிழ்மொழியில் தன்னுடைய சுயசரிதையைக் கவிதை வடிவில் எழுதிய முதல் மனிதர் வ.உ.சிதம்பரம் பிள்ளையே ஆவார் (Venkatachalapathy, 2021)[3]. அவருடைய சுயசரிதை ஒரு வரலாற்று ஆவணமாகவே விளங்குகிறது. அச்சுயசரிதையில் அவருடைய குடும்ப வரலாறு; அக்காலச் சிறைக்கொடுமை ஆகியன சுயசரிதையில் இடம்பெறுகின்றன. இச்சுயசரிதையில் கவிதை இயற்றும் திறமையும் இலக்கியத்தில் இருந்த ஈடுபாடும் வெளியாகின்றன.

ஆய்வாளார்

வ.உ.சிதம்பரம் பிள்ளையையைச் சிறந்த ஆய்வாளர் என்றே கூறலாம். தொல்காப்பியத்திற்கு மிகுதியான பதிப்புகள் வாராதிருந்த கால கட்டத்தில் வ.உ.சிதம்பரனார் தொல்காப்பிய இளம்பூரணர் உரைப் பதிப்பினை மேற்கொண்டார். பாடவேறுபாடுகளோ, உரை வேறுபாடுகளோ தரப்படும் பழக்கமில்லாத காலக்கட்டத்தில், பாடவேறுபாடுகளையும் உரை வேறுபாடுகளையும் வ.உ.சிதம்பரம் பிள்ளை அவர்கள் காட்டியுள்ளார். மேலும், "இன்னிலை" எனும் சிறந்த அறநூலைத் தமிழ் உலகிற்கு அறிமுகம் செய்துள்ளார். இவருடைய அரிய பெரும்செயல்கள் இவரைச் சிறந்த ஆய்வாளர் என்பதைக் காட்டுகிறது. தொல்காப்பியம் தவிர திருக்குறள் மீது அபாரக் காதல் கொண்டவர். திருக்குறளை நன்கு படித்தார். மணக்குடவர் உரை கொண்டு திருக்குறளின் சிறப்புகளைத் தெளிவாகப் புரிந்து கொண்டார். சிறையிலிருந்து விடுதலை ஆன பின்பு திருக்குறளில் அறத்துப்பாலைப் பதிப்பித்து வெளியிட்டார் (Manian & Ilasai, 2012)[1].

மணக்குடவர் உரையின் துணையுடன் தம்முடைய ஆய்வுக் கண்ணோட்டதில் வெளியான கருத்துகளையும் அந்த பதிப்பில் இணைக்கிறார். வ.உ.சி.யைப் பொறுத்தவரையில், "அறன் வலியுறுத்தல் எனும் அதிகாரமே பாயிரம்ஆக இருந்திருக்க வேண்டும் என்றும், கடவுள் வாழ்த்து, வான் சிறப்பு, நீத்தார் பெருமை ஆகியன இடைச் செருகல்கள்" என்றும் எழுதுகிறார். ஆனாலும் அவர் தம்முடைய கூற்றினை நிறுவிக் காட்டவில்லை. வ.உ.சி.யின்

வார்த்தைகளில் சொல்வதானால் "திருவள்ளுவ மாலையின் பாடல்களைப் பாடியவர்கள் திருவள்ளுவர் காலத்திற்குப் பிற்பட்ட காலத்தவர். அவர்களே திருக்குறளில் இடைச்செருகல்களாகப் பலவற்றை இணைத்திருக்கலாம்” என்று எழுதுகிறார்

சில அதிகாரங்களில் குறள்களின் வரிசையமைப்பினை மாற்றியமைக்கிறார். சான்றாக வாய்மை எனும் அதிகாரத்தில் மூன்றாவது குறளான “தன்னெஞ்சறிவது பொய்யற்க" எனும் குறளை முதற்குறளாகவும், வாய்மை எனப்படுவது மற்றும் பொய்ம்மையும் வாய்மையிடத்து ஆகியவற்றை இரண்டு மூன்றாம் குறள்களாகவும் கொண்டார்.

இலக்கியத் தொண்டர்

திருக்குறள் அன்பன் என்று தன்னை அறிமுகம் செய்துகொள்ள விரும்பியவர் வ.உ.சிதம்பரம் அவர்கள். 1935இல் டாக்டர் சாமிநாத அய்யர் அவர்களின் எண்பது வயது கொண்டாட்டத்தின் போது ஒரு வாழ்த்து மடல் அனுப்பினார். நிலைமண்டில ஆசிரியப்பாவின் 40 வரிகள் அடங்கிய பாடல். அப்பாடலின் இறுதி இரண்டு வரிகளில்,

"தூத்துக்குடி வாழ் ஒட்டப்பிடாரம்
சிதம்பரம் என்னும் திருக்குறள் அன்பனே"

என்று தன்னைத் "திருக்குறள் அன்பன்" என்று பெருமிதத்துடன் வெளிப்படுத்திக் கொண்டார்.

1934-இல் திருச்செந்தூரில் அறத்துப் பாலுக்கு மட்டும் இவர் எழுதிய விருத்தியுரை அரங்கேற்றம் பெற்றது. தம்முடைய வாழ்வின் இறுதி நாட்களில் அன்றாடம் தம்முடைய வீட்டில் இலக்கியச் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்வார். தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்து சிறந்த சொற்பொழிவாளர்கள் இந்த நிகழ்ச்சியில் பலர் பங்குகொண்டு சொற்பொழிவுகள் ஆற்றுவர். குறிப்பாகக் கம்பன், திருக்குறள், சிவஞானபோதம் தொடர்பான சொற்பொழிவுகள் நடைபெறும். "தூத்துக்குடி சைவசித்தாந்த சபை" என்ற அமைப்பை நிறுவி, அதன் மூலம்தான் இத்தகைய சொற்பொழிவுகளை வ.உ.சிதம்பரனார் அவர்கள் நடத்திவந்தார்கள். இந்தச் சொற்பொழிவுகளுக்கு வருபவர்களை தம்முடைய இல்லத்திலேயே தங்கவைப்பார். வசதி குறைந்த நிலையிலும், வந்தோரை வரவேற்று உபசரிக்கும் எண்ணம் குறையாத வளமான எண்ணம் வ.உ.சி.க்கு இருந்தது (Manian & Ilasai, 2012)[1].

நல்லாசிரியர்

இலக்கியங்களைப் படைப்பதோடு அவருடைய பணியை வ.உ.சிதம்பரம் அவர்கள் நிறுத்திக் கொள்ளவில்லை. இலக்கியங்களைப் பிறருக்குப் கற்பிக்கும் நல்லாசிரியராகவும் விளங்கினார். ஒரு முறை சென்னையில் அச்சுக்கூடம் ஒன்றில் சுவாமி சகஜானந்தர் என்ற துறவியைச் சந்திக்கிறார். உடனே அவருக்குத் தமிழ்ப் பயிற்சி ஊட்டினார் (Dorairaj, 2017)[4]. அவருக்குத் தமிழ் இலக்கியங்கள் மற்றும் திருக்குறள், தொல்காப்பியம் ஆகியனவற்றைப் போதித்தார். பிற்காலத்தில் சிதம்பரத்தில் நந்தனார்க்கழகம், நந்தனார்ப் பாடசாலை ஆகியவற்றை அவர் ஏற்படுத்தினார்.

சிறையிலிருந்து வெளிவந்த பின்பு வறுமையில் வாடினார். சென்னையில் சில ஆண்டுகள் தங்கினார். சிந்தாதிரிப் பேட்டை, பெரம்பூர் போன்ற இடங்களில் அரிசி, நெய், பருப்பு போன்ற பொருள்களை விற்கும் வியாபாரியாக வாழ்ந்து வந்தார். அப்போதும் தமிழ்மொழி மீது அவர் கொண்ட ஆர்வம் குறையவில்லை. பெரம்பூரில் அவர் வசித்து

வந்தபொழுது, அக்கம் பக்கத்தில் இருந்த பல மாணவர்களை அழைத்து, அவர்களுக்கு இலவசமாகத் தமிழ்ப்பாடம் கற்பித்தார். திருக்குறள், மற்றும் நீதிநூல்களைக் கற்பித்தார். தமிழ் இலக்கியங்களில் அம்மாணவர்களுக்கு ஆர்வம் உண்டாக்கினார்.

இலக்கியப் புரட்சியாளர்

வணிகக் கொடிபிடித்து வஞ்சக வலை விரித்து வளமார்ந்த திருநாட்டை வளைத்துக் கொண்ட வெள்ளை ஏகாதிபத்தியத்தின் வாணிப நோக்கத்தினை உச்சந்தலையில் அடித்திடும் வகையில் மெச்சத்தகுந்த பணியாற்றி, கப்பலோட்டி, அரசியலில் புரட்சி யாளராகத் திகழ்ந்த வ.உ.சி, இலக்கிய உலகில் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் 'இன்னிலை'யையும் ஒன்றாக இணைத்து அவர் 1917களில் தொடங்கி வைத்துச் சென்ற புரட்சித்தீ இன்னும் அணையவில்லை. இலக்கியச் சர்ச்சை தீர்ந்த பாடில்லை. அரசியலில் புரட்சியாளராகத் திகழ்ந்த அஞ்சா நெஞ்சர் வ.உ.சிதம்பரம் அவர்கள் அன்னைத் தமிழ்மொழி வரலாற்றிலும் அழியாப் புரட்சி செய்த மாபெரும் இலக்கியப் புரட்சியாளர் என்றும் கூறலாம்.

வ.உ.சி. சிறந்த பேச்சாளர்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வ.உ.சி. அவர்களின் சொற்பொழிவு அனைவரையும் குறிப்பாகத் திருநெல்வேலி பகுதி மக்களை வீறுகொண்டெழச் செய்தது. தூத்துக்குடியில் சிதம்பரம் பிள்ளை அவர்கள் முடிசூடா மன்னனாய் விளங்கினார். இவருடைய எழுச்சியூட்டும் பேச்சும், அதன்மூலம் விளைந்த போராட்ட உணர்வுகளும் குறித்து இந்து (5-3-1908; 6-3-1908) பத்திரிகையில் விரிவான செய்திகள் வெளிவந்தன. சிதம்பரனாரின் வீரமிகு பேச்சு கரைபுரண்டு ஓடும் வெள்ளம்போல இருந்தது. மக்களைத் திரட்டி, குறிப்பாகப் பாமர மக்களை ஒன்று சேர்த்து அவர்களுக்கு அரசியலைப் புரிய வைத்தவர் வ.உ.சி (Kannan,2005)[5]. அரசியல் வழியாகச் சிந்திக்கவும் செயல்படவும் பாமர மக்களைப் பயிற்றுவித்தவர் அவர். 'முரசம்' போன்ற தம் பேச்சால் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்நாட்டில் சிறப்பாகத் திருநெல்வேலி மாவட்டத்தில் அரசியல் எழுச்சியை ஏற்படுத்தி இருந்தார்.

வ.உ.சி.யின் 'மெய்யறிவு'

கண்ணனூர் சிறையில் இருக்கும்பொழுது அங்கிருந்த கைதிகளுக்கு அறக்கருத்துகள் பற்றி அடிக்கடி அறிவுரை சொல்லி வருவார். அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க, மிக எளிய சொற்றொடர்களில் உயரிய அறக்கருத்துகளை உள்ளடக்கி மெய்யறிவு என்ற நூலைக் கவிதை வடிவில் இயற்றினார். உண்மையில் சிறைக்கைதிகள் திருந்துவதற்காக இந்நூல் இயற்றப்பட்டது. ஆனால் உலகமக்கள் அனைவர்க்கும் பயன் தரும் வகையில் இந்த நூல் அமைந்துள்ளது. இந்நூல் திருக்குறளை அடியொற்றிச் சமயஞ்சார்ந்த அறநூலாக அமைந்துள்ளது. இதில் 10 அதிகாரங்கள் உள்ளன. அவை பின்வருமாறு:

தன்னையறிதல், விதியியலறிதல், உடம்பை வளர்த்தல், மனத்தையாளுதல், தன்னிலையில் நிற்றல், மறங்களைதல், அறம்புரிதல், தவஞ்செய்தல், மெய்யுணர்தல், மெய்ந்நிலையடைதல்.

இவற்றில் தள்ள வேண்டிய, ஏற்க வேண்டிய பல்வேறு அறக்கருத்துகள் செவ்வனே இடம்பெற்றுள்ளன. மருத்துவம், உடலியல் ஆகிய துறைகள் பற்றிய சிறந்த கருத்துகள் இந்நூலில் காணப்படுகின்றன. இந்த நூலில் திருக்குறள் முதலிய அற நூல்களின் தாக்கம் இடம்பெற்றுள்ளது.

மெய்யறம்

திருக்குறளை முதனூல் என்றும், திருக்குறளின் வழிநூல் "மெய்யறம்" என்றும் வ.உ.சி. குறிப்பிடுகின்றார். இந்நூலின் முன்னுரையில் தஞ்சை இராவ்பகதூர் சீனிவாசப்பிள்ளை அவர்களுக்கு இந்நூலைக் காணிக்கை ஆக்கியுள்ளார். வள்ளுவர் 7 சீர்களில், ஒண்ணே முக்கால் அடியில் குறளை இயற்றினார். ஆனால் வ.உ.சி.யின் மெய்யறப்பாடல்கள் ஒரே அடியில் அமைந்தவை. அறம் பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களை அடைதலே இந்நூல் கூறும் பயன் என்று கொள்ளலாம்.ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்தவர்களும் படித்துப் புரிந்துகொள்ளும் அளவில் அமைந்தது இந்தக் நூல். இந்நூலில் ஐந்து இயல்கள் உள்ளன. கவிதை அவையாவன: 1. மாணவரியல், 2. இல்வாழ்வியல், 3. அரசியல், 4. அந்தணவியல், 5. மெய்யியல். மொத்தம் 125 அதிகாரங்கள் ஒவ்வொரு அதிகாரத்திற்கும் 10 பாடல்கள் (ஓரடி) அமைந்துள்ளன.

திருக்குறள் பாடல்களின் பிழிவே மெய்யறம் எனலாம். ஆயினும் திருக்குறளேயன்றி ஆத்திசூடி, கொன்றை வேந்தன், திரிகடுகம், கலித்தொகை, தொல்காப்பியம் நன்னூல், புறப்பொருள் வெண்பாமாலை தண்டலையார் சதகம் ஆகிய நூல்களின் கருத்துகளின் அடிப்படையிலும் வ.உ.சி. தமது கருத்துகளை வழங்கியுள்ளார். அறநூல்களுள் எந்த நூலும் கூறாத 'இல்லமைத்தல்' என்ற அதிகாரத்தை வழங்கியிருப்பது சிறப்பாகப் பாராட்டுக்குரியது.

இல்லிற்கு ஈராயிரம்அடி சதுரமாம் (இல்லமைத்தல் 4) வளிஒளி அளவினுள் வரச்செல வழிசெயல் (இல்லமைத்தல் 7) என்ற பாடல் வரிகள் வ.உ.சி. அவர்கள் மனையடி சாத்திரக் கலையறிவினையும் பெற்றவர் என்பதை உறுதிப்படுத்துகிறது.
கலைச்சொல்லாக்கம்

தமது காலத் தேவைக்கேற்பப் புதுமை அதிகாரங்கள். சில வற்றையும் வ.உ.சி. படைத்துள்ளார். அறநூலார் எவரும் குறிப்பிடாத புதுமை அறங்களைத் தமது நூலில் அவர் குறிப்பிடுகிறார். குறிப்பாகக் கலைச்சொல்லாக்கம் பற்றிய உணர்வு வ.உ.சி.க்கு மிகுந்திருந்தது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ்க் கலைச்சொல்லாக்கம் குறித்து பாரதி, வ.வே.சு. ஐயர், இராஜாஜி போன்றோரும் தத்தம்பாணியில் சிந்திக்கத் தொடங்கினர். ஆனால் வ.உ.சி.யோ தனித்தமிழ்ப் பாணியில் சிந்திக்கலானார். வேற்றுமொழிக் கலப்பற்ற முறையில்,

“தனித்தமிழில் மொழிபெயர்த்துக் கொடுக்கத்
தக்க திறமையுடையேன்”

என்று வ.உ.சி. ஒப்புக் கொள்கிறார்.

வ.உ.சி. உருவாக்கிய சொல்லாக்கங்களுக்கு அவர் எழுதிய ‘வலிமைக்கு மார்க்கம்' சான்று பகருகிறது. ஆன்மா -பேரறிவு (யான் ‘எனது' எனக் கருதாது உலக நன்மையைக் கருதுவது) ஜீவன் சிற்றறிவு (யான் ‘எனது' எனக் கருதாது தனது - நன்மையையே

கருதுவது) என்று வ.உ.சி. புதுமையாகவும் பொருத்தமாகவும் புதிய சொற்களை உருவாக்கினார். வெறும் சொல்லாக இல்லாமால் தத்துவக் கருத்துகளை உள்ளடக்கிய சொற்களாக அவை அமைந்தன. தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்தும்போதும் அவற்றிற்கிடையேயான நுணுக்கமான வேறுபாடுகளை நன்கு உணர்த்தும் ஆற்றல் பெற்றிருந்தார். சான்றாக, துன்பம் - பொறியால் வரும் வருத்தம் என்ற அவருடைய சொல்லாட்சிகளே அவருடைய தமிழ்ப் பற்றுக்குத் தக்கச் சான்றுகளாகும்.

முடிவுரை

ஒருமுறை வ.உ.சி. அவர்கள் தஞ்சை சென்றிருந்தார். அங்குச் சீனிவாசப்பிள்ளையின் வீட்டில் விருந்தினராகத் தங்கியிருந்தார். அப்போது இவருக்குப் பால் கொண்டு வந்த பாத்திரத்தில் எறும்புகள் இருந்தன. அவற்றைப் பணியாள் மெல்லப் போக்கினான். அது கண்ட சீனிவாசப்பிள்ளை விரைவில் எறும்புகளை அகற்றுமாறு ஆணையிட்டார். எறும்புகள் எல்லாவற்றையும் சேதமில்லாமல் அந்த வேலையாள் உயிருடன் நீக்கினார். இந்தச் செயலைப் பார்த்துக் கொண்டிருந்த சிதம்பரம் பிள்ளை அவர்கள் கண்களிலிருந்து “கண்ணீர்" வடிந்தது. அப்போது வ.உ.சி. கூறியது என்ன தெரியுமா?"

"தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை” (Puliyūrk kēcikaṉ)[6].

உண்மையில் வ.ஊ.சி அவர்கள் சிறந்த பன்முகத்தன்மை கொண்டவர் மட்டுமல்ல. அவர் சிறந்த மனித நேயம் கொண்டவர் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. நல்ல திடமான அறிவு மனிதர்களை நிலைக்கொள்ளச் செய்யாது. மாறாக அவர்களை வெற்றிக்கொள்ளச் செய்யும். சிறை சென்ற போதும், வறுமையில் வாடிய போதும், சிதம்பரம் பிள்ளை அவர்கள் தான் கொண்ட முயற்சிகளைக் கைவிடவில்லை. நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம் மலையின் மானப்பெரிது என்ற திருக்குறளுக்கேற்ப காலம் கடந்தும் சிறந்து விளங்குகிறார் வ.ஊ.சிதம்பரம்பிள்ளை.

References:

1. Manian & Ilasai (2012). "Swadeshi ship on the blue waters of Tuticorin". Retrieved 17 August 2014.
2. Arockiaraj, J (2011). "VOC's descendants found in dire straits". Madurai. TNN. Retrieved 17 August 2014.
3. Dorairaj, S "Doyen of Swadeshi shipping". The Hindu. Archived from the original on 26 November 2014. Retrieved 26 February 2017.
4. Venkatachalapathy, A. R. (2021). "Subramania Bharati: The poet and the patriot". The Hindu. ISSN 0971-751X. Retrieved 11 December 2021.
5. Kannan, S. (2005). *V.O.C* - A multifaceted view *[Va.U.Ci otu paṉmukap pārvai]*. International Institute of Tamil Studies.Chennai.
6. Puliyūrk kēcikaṉ. (2021). Tirukural Text *[Tirukkural urai]*, pūmpukār patippakam Chennai.